*பிரசங்கம் 5*

# புருஷனுக்கும் மனைவிக்கும் இடையேயான பிரச்சனைகள்

## (1 கொரிந்தியர் 7:1–16)

*ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் செய்து கொண்ட பிறகு அவர்கள் "மனமகிழ்ச்சியோடு எப்போதும் வாழும்படி" எதிர்பார்க்கப்படுகின்றனர். எப்படியிருப்பினும், ஒவ்வொரு முறையும் மழையுடன் வானவில் வருவது போல, ஒவ்வொரு விவாக அனுபவத்திலும் புருஷனுக்கும் ஸ்திரீக்குமிடையே சச்சரவுகள் வருவது இயல்பு. பூமியிலேயே கணவனுக்கும் மனைவிக்கும் இடையே அதிகபட்ச நெருக்கமான உறவை ஏற்படுத்துவது உறுதியளிக்கப்பட்டாலும், உடனடியாகவோ பின்னதாகவோ, இருவருக்குமிடையே முரண்பாடுகள் இருக்கும். இரண்டுபேர் நெருக்கமாக ஒன்றான வாழ்க்கை வாழும்போது, அவர்களிடையே சில நுணுக்கமான வித்தியாசங்களை கண்டுபிடிப்பார்கள். விவாகரத்துவரை இந்த முரண்பாடுகள் அவர்களை கொண்டு செல்லுமளவுக்கு பெரிதாகிவிடக்கூடும். முரண்பாடுகளை அனுபவிக்கும் தம்பதி, நுகத்திலே இணைக்கப்பட்டவர்களாய் சந்தோஷமில்லாமலேயே நிலைத்திருக்க (கூடிவாழ்ந்து கொண்டிருக்க)லாம்.*

*தள்ளிவிடுதலை தேவன் வெறுக்கிறார் (மல்கியா 2:16; மத்தேயு 19:3-9). இது முழுமையான தீமை. விவாகரத்து தேவனுடைய திருமணத்திட்டத்துக்கு முரணானதும், விவாகரத்து செய்து கொண்டவர்களுக்கும், பிள்ளைகளுக்கும், குடும்பத்தைச் சார்ந்த மற்றவர்களுக்கும் கடின உணர்வை ஏற்படுத்தக்கூடியது. அது சமுதாயத்தையும் சீரழிக்கும். சில வேளைகளில் திருமண பந்தத்தில் இணைக்கப்பட்ட ஒரு நபரை அவரைக்கடுமையாய் நடத்துகிற அவரது துணையிடமிருந்து பிரிப்பதோ அல்லது விவாகரத்து பெற வைப்பதோ அவசியமாகும். அப்படியொரு சோகநிகழ்ச்சி நடக்கும்போது, விவாகரத்து இரண்டு தீமைகளில் குறைவானது.*

*ஆகையால், கிறிஸ்தவர்கள் எப்படியாகிலும் தங்களுடைய வாழ்க்கைத் துணையுடன் ஒத்துப் போக ஏதுவாகவும், திருமண பந்தத்தில் நிலைத்திருக்கும்படியாகவும் ஏதாவதொரு பரிசீலனை செய்ய வேண்டியவர்களாயிருக்கிறார்கள் (மத்தேயு 19:6) கிறிஸ்தவர்களுக்கு விவாகரத்தைத் தெரிந்து கொள்ளும் உரிமையில்லையெனில், பிறகு வேறு என்ன உரிமைகள் உள்ளன?*

### முரண்பாடுகளை தவிர்ப்பதற்காக செயல்படுதல்

*திருமண வாழ்க்கையில், புருஷனுக்கும் மனைவிக்கும் இடையேயான முரண்பாட்டிற்கான சரியான நிவாரணம், அப்படியோரு முரண்பாடு*

வராமலேயே காத்து கொள்வது தான். இது முற்றிலும் சாத்தியமில்லையெனினும் சில அடிப்படை வழிகாட்டுதல் உதவிகரமாக இருக்கலாம்.

(1) *சரியான நபரை விவாகம் பண்ணுங்கள்.* ஒரு கிறிஸ்தவன் மற்றொரு விசுவாசமுள்ள (தேவன் விரும்புகிறபடி வாழ முயற்சிக்கிற) ஒரு நல்ல கிறிஸ்தவ பெண்ணையோ வாலிபனையோ விவாகம் பண்ணிகொள்ள வேண்டும். உங்களுடன் சமமான பங்கேற்கக் கூடிய நபரை நீங்கள் விவாகம் பண்ணுவது கூடுதல் உதவியாக இருக்கும். விவாகத்திற்கு முன்பாக ஒருவரின் செயல்பாட்டைக் கொண்டு திருமணத்திற்கு பின்பு இப்படித் தான் இருப்பார் என்று உங்களால் சரியான முறையில் கணிக்க இயலாமல் இருக்கலாம். ஆகிலும் நீங்கள் ஒருவருக்கு அருகில் இருந்து, பழகினால் திருமணத்திற்கு பின்பு இப்படித்தான் இருக்கக் கூடும் எனும் கருத்து உங்களுக்குள் உருவாகக் கூடும்.

(2) *சரியான நபராக மாற வழிதேடுங்கள்.* நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்து ஆவிக்குரிய முறையில் நீங்கள் வளர முயற்சித்துக் கொண்டிருப்பீர்களானால், நீங்கள் சுய நலமற்றவராக, நற்பண்புள்ளவராக, கனிவானவராக, மன்னிக்கும் சுபாவமும் சகிப்புத் தன்மையுடையவருமாக இருப்பீர்கள் (1 கொரிந்தியர் 13:5; எபேசியர் 4:32; கொலோசெயர் 3:13) - கிறிஸ்தவர்கள் கொண்டிருக்க வேண்டிய ஒரு சில குணாதிசயங்களே இங்கு பெயரிடப்பட்டுள்ளன. இரண்டு பேரும் உண்மையான கிறிஸ்தவராயிருக்க இயன்ற அளவு பிரயாசப்படுவார்களானால், அவர்களிடையே மிக வினயமான முரண்பாடுகள் மிகக் குறைவாகவே இருக்கக் கூடும்.

(3) *உங்கள் இல்லத்தை கிறிஸ்து மையம் வகிக்கக் கூடிய இல்லமாக மாற்றுங்கள்.* உங்கள் இல்லம் கிறிஸ்து கனப்படும் இடமாக இருக்கவேண்டும். திருமறையை தினசரி வாசித்து, ஒன்றாக பாடி குடும்பமாக ஜெபியுங்கள். குடும்பமாக சேர்ந்து தொழுகைக்குச் செல்லுங்கள். ஒன்றாக நல்லதைச் செய்யுங்கள். இந்த முன்னுரிமைகளோடு வாழுவீர்களானால், அப்பொழுது உங்கள் இல்லம் பாதுகாப்பு உள்ளதாயும், யுத்த பூமிக்குப் பதிலாக அன்பின் புகலிடமாகவும் விளங்கும்.

## முரண்பாடுகளை சரிசெய்யத்தக்கதாக கிறிஸ்தவ வழியில் பிரயாசப்படுங்கள்

மிகச் சிறப்பான விவாகங்களில் கூட புருஷனுக்கும் மனைவிக்குமிடையே முரண்பாடுகள் ஏற்படுவது ஏன்? வித்தியாசப்பட்ட அநேகக் காரணங்களில் சிலவற்றை பின்வரும் காரியங்களால் அறிவோம்.

(1) *தனித்தன்மை வித்தியாசம்* - எல்லாவற்றையும் சாதகமாகக் காணும் ஒருவர் எல்லாவற்றையும் பாதகமாக்க காணும் ஒருவரை மணமுடித்திருக்கலாம்; ஒரு செலவாளி சேமிக்கும் குணமுடைய ஒருவரை மணமுடித்திருக்கலாம்.

(2) *அடிப்படை (ஆண் - பெண்) பால் வித்தியாசம்.* ஆணும் பெண்ணும் தன்மைகளில் வித்தியாசமுள்ளவர்களாயிருப்பார்கள், பிறவிக்குணங்களில் ஒத்துப்போகாத தன்மைகளால் முரண்பாடுகள் ஏற்படலாம்.

(3) *கருத்து வேறுபாடுகள்.* குறிப்பிட்ட சூழ்நிலையில் என்ன செய்வது, எப்படி செயல்படுத்துவது என்கிற விஷயத்தில் ஒரு நல்ல விசுவாசமுள்ள கிறிஸ்தவன் கூட ஒத்துப் போகும் தன்மையற்றவராகி விடுவார்.

(4) *மனித பெலவீனம்.* நாம் சுயநலமற்றவர்களாயும், தாழ்மையுள்ளவர்களாயும் இருக்க விரும்பினாலும், நேரம் வரும்பொழுது சுயநலமுள்ளவர்களாயும், பெருமையுள்ளவர்களாயும் மாறிவிடுவோம். அப்படி நடக்கும் போது, தனது வாழ்க்கைத் துணையுடன் முரண்படுவார்.

முரண்பாடுகளைச் சரிசெய்ய என்ன செய்ய வேண்டும்? இதோ சில அடிப்படை ஆலோசனைகள்:

1. ஜெபத்திலே தேவனிடத்தில் போங்கள், அவருடைய வசனத்திலிருந்து ஞானத்தைத் தேடுங்கள்.
2. பிரச்சனையின் தன்மையை அளவிடுங்கள்.
3. உங்களைக் குறித்தும் ஏற்பட்ட முரண்பாட்டில் உங்களுக்கு இருக்கும் பங்கையும் பரிசோதியுங்கள்.
4. பிரச்சனையைத் தீர்க்கிற விஷயத்தைத் தள்ளிப்போட்டுக் கொண்டிருக்காதீர்கள்.
5. எச்சரிக்கையாக பேச்சுத் தொடர்பு கொள்ளுங்கள்.
6. கவனமாகக் கேட்டறியுங்கள்.
7. பரஸ்பர ஏற்புடையத் தீர்ப்பைத் தேடுங்கள்.
8. கிறிஸ்தவர்கள் தாழ்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்பதை மனதில் வையுங்கள் (எபேசியர் 5:21;).
9. தேவைப்பட்டால் சூழ்நிலையை ஏற்றுக் கொள்ளக் கற்றுக் கொள்ளுங்கள்.

உதவிகர*மாயிராத* அணுகுமுறைகளில் ஒன்று, புருஷன் ‘‘வீட்டுத்தலைவனாக’’ ஆளுகை செய்யும் தன் உரிமையைக் கேட்டு பெற முயற்சிப்பது. புருஷன் தன் மனைவிக்குத் தலையாயிருக்கிறான் மனைவியானவள் அவனுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று திருமறை போதித்தாலும் (எபேசியர் 5:22-24), கிறிஸ்து தமது சபையில் அன்புகூருவது போல புருஷனும் தன் மனைவியினிடத்தில் அன்புகூர வேண்டும் என்றும் அது போதிக்கிறது (எபேசியர் 5:25; வசனம் 28யும் காண்க). முரண்பாடுகள் ஏற்படும் பொழுதெல்லாம், புருஷனும் மனைவியும் பங்குதாரர்கள் போல் பிரச்சனையை அணுக வேண்டும் - “சம அதிகாரமுள்ள” பங்குதாரர்களாக அல்ல, கிறிஸ்தவப் பங்காளிகளாக.

## முடிவுரை

விவாகரத்து (தள்ளிவிடுதலைக்) குறித்து இயேசுவினிடத்தில் கேட்கப்பட்ட போது, “ஆதலால் தேவன் இணைத்ததை, மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவன்” என்றார் (மத்தேயு 19:6) நாமும் கூட திருமண பந்தத்தைக் காத்துக் கொள்ள வேண்டிய முக்கியத்துவத்தை வலியுறுத்த வேண்டும்; நம்மிலே மணமானவர்கள் நமது திருமண வாழ்க்கை சிறக்கப் பிரயாசப்படுவோமாக. இன்னும் விவாகமாகாதவர்கள், தங்களுடைய வாழ்வின் மீதி நாட்களெல்லாம் வாழ வேண்டிய நபர்களை அதிகமான கவனத்துடன் தேர்ந்தெடுத்து விவாகம் பண்ண வேண்டும். திருமணக் காரியங்களில், நாம் செய்கிற யாவும் சொல்லுகிற யாவும் கர்த்தருடைய நாமத்தை மகிமைப் படுத்துவதாக இருக்கட்டும்.